**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 04 October–December 2024**

# அகநானூற்றில் ஊர் பெயரும் பண்பாடும்

**மா.பத்மஜா,**பதிவு எண்- 21113154022032,முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ் உயராய்வு மையம்,தமிழ்க்கலை ஆய்வகம்,தெ.தி.இந்துக்கல்லூரி,நாகர்கோவில் - 02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்,திருநெல்வேலி.
padmajam1994@gmail.com
ORCiD: https://orcid.org/0000-0002-0267-7336

நெறியாளர் : **முனைவர்இரா.சொர்ண பமிலா**, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க் கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்,திருநெல்வேலி.
sornabamila1984@gmail.com
ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644

**ஆய்வுச் சுருக்கம்**

காலம் காட்டும் கண்ணாடியாக திகழ்வது சங்க இலக்கியங்கள். அவை மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும், பழக்கவழக்கங்களையும் சிறப்பாக எடுத்துரைக்கிறது. மக்கள் தங்கள் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப நிலங்களை ஐவகையாக பிரித்து வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் பறைச் சாற்றுகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் தலைவன் தலைவி காதல் வாழ்க்கை மட்டுமல்லாமல் அங்குள்ள ஊரின் வளத்திற்கு தலைவியின் அழகை உவமையாக குறிப்பிடுவர். அந்நிலங்களுக்குள் பல ஊர் பெயர்களை அமைத்து அவற்றிற்கு பெயரிட்டும் அழைத்து வந்தனர். அதுவே காலப்போக்கில் ஊர் பெயராக மாறியது. ஊர் என்பது நகரம், தலைநகரம், துறைமுகம் என அனைத்தையும் குறிக்கும் பொதுச் சொல்லாக விளங்குகிறது. ஊர்கள் மிகவும் பாதுகாப்பு மிக்கதாகவும் வறுமை என்ற ஒன்றை அறியாததாகவும் திகழ்கிறது. மக்கள் உழவுத் தொழில் செய்தும் திருவிழாக்களை கொண்டாடி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர். தங்கள் இல்லம் தேடி வரும் உறவினர்களுக்கு விருந்தினை வழங்கி பசியை போக்கும் அளவிற்கு வளமிகுந்த ஊராக காணப்படுவதை இக்கட்டுரை வழி அறிந்து கொள்ளலாம்.

**முன்னுரை**

காலத்தால் அழியாத சிறந்த இலக்கிய கருவூலமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.இவை காதலும், வீரமும் இணைந்த வாழ்வின் தத்துவ பேழை. தமிழரின் காலக் கண்ணாடியாக பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை நூல்கள் விளங்குகிறது. பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்து கூறுவதால் தமிழரின் தனி அடையாளமாகவும் திகழ்கிறது. சங்கமக்கள் வாழ்ந்த இடத்தின் பெருமைகளை பறைசாற்றும் எட்டுத்தொகை நூல்களில் அகம் சார்ந்த நூலாக அமையும் அகநானூற்றில் உள்ள ஊர்களின் பண்பாடுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**அழும்பில்**

பெரும்பூண் சென்னி என்னும் சோழ வேந்தனின் வளமான ஊர்களில் ஒன்று அழும்பில். வளமான ஊர்களை தலைவியின் அழகிற்கு உவமையாக கூறுவது புலவர்களின்

இயல்புகளுள் ஒன்று. இவ்ஊரின் அழகினை தலைவியின் அழகிற்கு உவமையாக குடவாயில் கீர்த்தனார் சிறப்பாக கூறியுள்ளார் ,

**"அல் அம் கன்னி பெரும்பூண் சென்னி**
**அழும்பில் அன்ன அறாஅ யாணர்"** **(அகம் 44 ,14-15 )**

இவ்வூரில்வெற்றியை மட்டும் விரும்பும் வலம்சுழி கோசர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களது கோட்டையில் அகழிகளும், பெரிய அவைக்களங்களும் அழகாக காட்சியளித்தன. அதனை பெரும்பூண்சென்னி போர் புரிந்து அழித்தான். சங்ககாலத்தில் பசு, பார்ப்பணர், பெண்கள், மூத்தோர் இவர்களை பாதுகாத்து வீரருடன் மட்டுமே போர் புரிவது வழக்கம். அதனைப் போல இங்கும் பெண்களை பாதுகாத்து போர் புரிந்துள்ளனர் என்பதை புறநானூறும் சுட்டும்,

**"அழும்பிலன் அடங்கான் தகையும் என்றும்,**
**வலம் புரி கோசர் அவைக் களத்தாலும்,**
**மன்றுள் என்பது கெட...........**
**........ ........ ........ ......**
**தெற்றிப் பாவை திணி மணல் அயரும்**
**மென் தோள் மகளிர் நன்று புரப்ப"** **(புறம்283,5-12)**

என்ற பாடல் எடுத்துரைகிறது.

**ஆமூர்**

ஆமூர், மணங்கமழும் மலைச்சாரலையுடைய குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கே அமைந்துள்ளது.இங்கு வண்ணம் தீட்டப்பட்ட பெரிய மதில்கள் புகழால் உயர்ந்து சிறப்புடன் விளங்குகிறது. அம்மதிலில் மறைந்திருந்து தாக்கும் துளைகள் காணப்படும் சிறப்பைடையது.இவ்வூரை வானவன் என்னும் சேர மன்னன் தாக்கிய போது ஆமூரின் அரசன் ‘கொடுமுடி’ என்பவன் வானவனை தாக்கி ஆமூரை காப்பாற்றினான் என்பதை,

**"விசும்பின் நல்ஏறு சிலைக்கும் சேண்சிமை**
**நறும்பூஞ் சாரற் குறும்பொறைக் குணா அது**
**வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்**
**மிஙஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்**
**தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறி**
**கொடுமுடி காக்கும்குரூஉக்கண் நெடுமதில்**
**சேண் விளங்கு சிறப்பின் ஆமூர் ஏய்தினும்**
**ஆண்டு அமைந்து உரையுநல் அல்லர்"** **(அகம்159,13-20)**

என்று அகநானூற்று பாடல் வரி சிறப்பிக்கின்றன. நல்லியக்கோடனின் மருதவளம் கொண்ட ஊராகவும், நீர்வளம், நிலவளம் ,நெல்வளமும் நிரம்ப பெற்ற ஊராகவும் ஆமூர் விளங்குகிறது. உழவர்களோடு அந்தணர்களும் வாழ்ந்து வந்த இவ்வூருக்கு சென்றால் உழவரின் தங்கையானவள், யானையின் கையை ஒத்த பின்னல் தொங்கும் சடையை உடையவள், வளையல் அணிந்த கையால் குத்திய அரிசியில் பொங்கிய வெண் சோற்றினையும் ,நண்டு குழம்பையும் விருந்தாக உண்ண தரும் அளவிற்கு வயல் வளம் மிகுந்த ஊராக ஆமூர் காட்சியளித்தது என்பதை ,

**"வலம் பட கடக்கும் வலிப்புணர் எருத்தின்**
**உரன்கெழு நோண் பகட்டு உழவர் தங்கை**
**அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
**கவைத்தாள் அலவன் சுவையொடு பெறுவீர் "** (சிறுபாண் :189-195 )

என்று சிறுபாணாற்று வரிகளும் சான்று பகர்கிறது.

**இடையாறு**

இடையாறு கரிகால்வளவனது வளம் பெருந்திய ஊர். இதனை இடையாற்றுமங்கலம் என்றும் கூறுவர். போரில் வெற்றி பெற்ற பெரும்புகழை உடையவன். தன் ஊர் மக்கள் வறுமையால் பிற ஊருக்கு செல்லாமல் பேணி பாதுகாப்பவன். இத்தகைய சிறப்புடைய ஊரில் வாழும் உழவர்கள் உழவு தொழிலை செய்து முடித்துவிட்டு கலப்பையை ஓரமாக வைத்திருந்தனர். மழை பெய்து ஓய்ந்த வானில் கார்த்திகை மீன் ஒளிர ஆரம்பித்தது. மக்கள் தெருவில் மாலைகள் தொங்கவிட்டும், திருவிளக்குகள் ஏற்றியும் கார்த்திகை திருவிழாவினை கொண்டாடினர். புதிதாக திருமணம் முடிந்த பெண் நீராடிய பின் தன் கூந்தலில் புது மலர்களை சூடிக் கொண்டும், அவள் உண்பதற்காக கல்கட்டியால் செய்யப்பட்ட அடுப்பில் பாலை ஊற்றி உணவு சமைக்கின்றனர். அங்குள்ள மகளிர் கையில் உள்ள வளையல் குலுங்க புதுநெல்லை அவலாக இடிக்கின்றனர். அவ்வோசையை கேட்டு அஞ்சி, வாழைமர மடலில் இருக்கும் வெண்ணிற பறவை உயர்ந்து வளர்ந்துள்ள மாமரத்தில் சென்று தங்கும் சிறப்புடைய ஊராக விளங்குவதை,

**"புதுமண மகடு அயனிய கடநகர்ப்**
**பல்கோட்டு அடுப்பில் பால் உலை இரீஇ,**
**கூழைக் கூந்தற் குறுந்தோடி மகளிர்**
**....... ...... .... ..... .... ....**
**....... .... ... .... ... ........**
**செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்**
**வெல்போர் சோழன் இடையாறு அன்ன"** (அகம்141,14-23)

என்ற அகநூற்று பாடல் சுட்டுகிறது. இதனையே,

**"பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை**
**ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி"** (குறுந்238,1-2)

என்ற குறுந்தொகை பாடலும் உலக்கையால் அவல் இடித்த செய்தியை சிறப்பாக விளக்குகிறது.

**குடவாயில்**

குடந்தை என்ற குடவாயில் ஊரானது சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்ட ஊர்களில் ஒன்றாக அமைகிறது. பசுஞ்சோலையும் வயலும் சூழ்ந்த ஊரினை பெரும்பூட் சென்னி எனும் சோழன் ஆண்டு வந்தான். இவ்வூரில் பாண்டியனின் அழும்பில் ஊர் போன்று நீர்வளம், நெல்வளம், மற்றும் அடர்ந்த காடுகளை உடைய சிறப்புமிக்க ஊராக அமைந்துள்ளது என்பதை,

**"அழூம்பில் அன்ன அறஞானர்**
**பழம் பல் நெல்லின் பல்குடி பரவை**
**பொங்கடி படிகாயம் மண்டிய பசுமிளை**

**தன் குடவாயில் அன்னோள்" (அகம் 44 ,15-18)**

என்ற அகநானூற்று பாடல் வழி சிறப்பாக அறியமுடிகிறது. சோழர்கள் பகைவரிடமிருந்து பெற்று வரும் திறைப் பொருளை பாதுகாத்து வைக்கும் ஊராக குடந்தை என்ற குடவாயில் ஊரானது திகழ்கிறது என்பதை அகநானூறு,

**"கொற்ற சோழர் குடந்தை வைத்த**
**நாடு தரு நிதியினும் சிறிய**
**அருங் கடி படுக்குவள் அறன்இல் யாயே" (அகம்-60,13-15)**

குடவாயில் என்ற சோழநாட்டு ஊரில் மழை தங்களது வளங்களை அள்ளிக் கொடுக்கிறது. அதனால் ஊரை சுற்றியுள்ள நீர் நிரம்பிய அகழிகளில் குளிர்ச்சியான நீல மலர்கள் அதிகமாக மலர்ந்து மணம் வீசுகின்றன .இத்தகைய வளமிகு ஊராக குடவாயில் சிறந்து விளங்கியதை நற்றிணையும் உணர்த்துகிறது.

**தேர்வண் சோழர் குடந்தை வாயில்**
**மாரிஅம் கிடங்கின் ஈரிய மலர்ந்த,**
**செயல் உறு நீலம் போன்றன" (நற்-379,7-9)**

**கழுமலம்**

குதிரைகளையும், தேர்களையுடைய வள்ளன்மை மிக்க குட்டுவன் என்ற தலைவன் ஆட்சி செய்யும் ஊர் கழுமலம். இவ்வூரானது அழகில் சிறந்து விளங்குகிறது. என்பதை

**"பொய்சுவர் புரவிக் கைவண் கோமான்,**
**நல்தேர்க் குட்டுவன் கழுமலத்து அன்ன" (அகம் 207,8-9)**

என்று அகநானூற்று வரிகள் கழுமலம் ஊரின் அழகினை சிறப்பிக்கிறது. சோழருக்கும், சேரருக்கும் நடந்த போரில், சோழன் பெரும்பூட்சென்னியின் படைத்தலைவன் பழையன் என்பவனை, சேரர் படைத் தலைவர்கள் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி புண்துறை ஆகிய அறுவரும் இணைந்து கொன்றனர். இச்செயலினால் சோழ மன்னன், சேரப் படை தலைவனாகிய கணையனைக் கைப்பற்றியதோடு சேர நாட்டில் சிறந்த ஊராகிய கழுமலத்தையும் கைப்பற்றிக் கொண்டான் என்பதை,

**"முன் இங்கு ஊர்தி பின்னிலை ஈயாது,**
**ஊர்க பாக! ஒரு வினை, கழிய**
**நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி,**
**துன் அருங்கடும் திறற் கங்கன் கட்டி**
**பொன் அணி வல்வில் புன்றுறை**
**என்று ஆங்கு அன்று அவர்**
**குழீஇய அளப்பு அருங்கட்டூர்**
**பருந்து படப் பண்ணி பழையன்பட்டென**
**கண்டது நோனானாகிய திண் தேர்க்**
**கணையன் அகப்பட கழுமலம் தந்த" (அகம் 4,5-14)**

அகநானூற்று பாடலால் அறியலாம். கழுமலம் என்ற ஊர் வளமானது சோழர்கள் ஆட்சி செய்யும் உறைவூரின் வளத்திற்கு இணையாக அமைந்திருப்பதை நற்றிணை பாடல் வரிகளும் எடுத்துரைக்கிறது.

**"அடைபொருள் கருதுவீர் ஆயின்**
**குடையோடு கழுமலம் தந்த நல்தேர்ச் செம்பியன்**

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

**பங்குனி விழவின் உறந்தையொடு**
**உள்ளிவிழவின் வஞ்சியும் சிறிதே"** **(நற்243,6-9)**

**உறையூர்**

அழகில் சிறந்தவள் ஆகிய ஐயை என்பவளின் தந்தையாகிய வள்ளல் தித்தன் என்பவனின் உரிமையான ஊர் உறையூர். இவ்வூரில் வற்றாத காவிரி ஆறானது பாய்ந்து வளங்களை அள்ளித் தெளிக்கிறது. காவிரி நீர்நிலையில் செல்லக்கூடிய படகுகளில் உள்ள களியானது நிலைத்து நிற்காத அளவிற்கு அழகுடையதாக இருக்கிறது. காவிரி ஆற்றின் வளத்தால் உறையூர் சிறந்து விளங்குகிறது.

**"இழை அணி பணைந்தோள் ஐயை தந்தை**
**மழை வளம் தரூஉம் மாவன் தித்தன்**
**பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்-**
**கழை நிலை பெறாக் காவிரி நீத்தம்,**
**குழை மான் ஒள்இழை நீ வெய்யோளோடு"** **(அகம் 6,3-7)**

உறந்தை என்ற ஊர் சோழரின் தலைநகரமாக விளங்குகிறது. இவ்வூரினை கோழி அல்லது கோழியூர் என்றும் கூறுவர்,

**"கோழியோனே கோப்பெருஞ் சோழன்"** **(புறம் -212)**

என்ற புறநானூற்று வரிகளும்,

**"வஞ்சியும் கோழியும் போல "** **(பரிபா. தி-7)**

என்ற பரிபாடல் திரட்டு அடியும் உறந்தையை கோழியூர் என்று கூறுவதை பறைசாற்றுகின்றது. இவ்வூரில் நீர்நிலைகள் அதிகமாக காணப்படுகின்றன. ஓவியம் போன்ற பொய்கைக் கரையில் இந்திரகோபம் என்ற பூச்சி வகைகள் மலர் தாதுகள் உதிர்ந்து கிடப்பது போல காட்சியளிக்கிறது. இத்தகைய பொய்கையில் வளரும் தாமரைகள் மலரும் போது, பெண்களின் முகத்தினை ஒத்தாக விளங்குகிறது. அத்தகைய அழகுடைய பொய்கைகளையும், வயல்களையும் உடைய வளமுடைய ஊர் உறையூர்,

**"நறுநீர்ப் பொய்கை அடைக்கரை றிவந்த**
**துறுநீர்க் கடம்பின் துணை ஆர்க் கோதை**
**ஓவத்து அன்ன உண்துறை மருங்கில்**
**கோவத்து அன்ன கொங்கு சேர்பு உறைத்தலின்**
**வருமுலை அன்ன வண்முகை உடைந்து**
**திருமுகம் அவிழ்ந்த தெய்வத்தாமரை"** **சிறுபாண்(68-72)**

என்று சிறுபாணாற்று வரிகளும் சான்று பகர்கின்றன.

**முடிவுரை**

பண்டைய தமிழரின் வாழ்க்கை முறை இயற்கைக்கு உட்பட்டதாக அமைந்திருந்தது. அன்பு கலந்த வாழ்க்கை முறைகளும், பழக்கவழக்கங்களையும் எடுத்துரைக்கும் களஞ்சியமாக இலக்கியம் திகழ்கிறது. அழும்பிலின் வளத்திற்கு தலைவியின் அழகை உவமையாக கூறும் அளவிற்கு இவ்வூர் சிறப்புற்று இருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது. சோழர்களின் ஊராகவும் பெரிய அவைக்களங்களை கொண்ட வலஞ்சுழி கோசர்களின் வளம் மிகுந்த ஊராக ஆமூர் விளங்குகிறது. இடையாறு வறுமை ஒன்றை அறியாத வளமான மற்றும் கார்த்திகை திருவிழா நடைபெறும் ஊராகவும் விளங்குகிறது. இங்கு புது மணப்பெண்

உண்பதற்கு புது நெல்லை அவல் இடித்து இங்குள்ள மகளீர் வழங்குவர். சோழர்கள் ஆட்சிக்கு உட்பட்ட பாதுகாப்புமிக்க ஊராகவும் குடந்தை திகழ்கிறது. இவ்வாறு அகநானூற்றின் வழி பசுமையான வளங்களை கொண்ட ஊர்களையும் ,அவற்றின் பண்பாட்டுக் கூறுகளையும் இக்கட்டுரை வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.பாலசுப்ரமணியன்.கு.வெ, புறநானூறு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600098. முதல் பதிப்பு-2004.

2.பாலசுப்ரமணியன்.கு. வெ, நற்றிணை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600098. முதல் பதிப்பு-2004.

3.மோகன்.இரா, பத்துப்பாட்டு முதல் தொகுதி மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிலிட், 41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை -600098.

4.சுப்பிரமணியன் பெ,பரிபாடல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் ,சென்னை -600098. முதல் பதிப்பு-ஏப் 2004.

5.செயபால் இரா,அகநானூறு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை -600098. முதல் பதிப்பு-ஏப் 2004.

6.நாகராசன்.வி,குறுந்தொகை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600098. முதல் பதிப்பு-ஏப் 2004.